மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது குத்தகை வருவாய் ஆய்வாளர் குடியிருப்புப் பழுது பார்க்கப்பட்டு, அது இப்போதைக்கு முடிவுற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் வரை அது குடியிருப்புக்கு இலாயக்குள்ளதாக இருக்கவில்லை. அதில் யாரும் குடியிருக்கவில்லை. அமைச்சர் அவர்கள் இப்பொழுது குடியேறும் நிலையிலுள்ளது என்று தகவல் சொல்கிறார்கள். அது எந்த அளவுக்குச் சரியானது என்று தெரியவில்லை. என்றாலும், அதே மாதிரி பல அரசுக் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்து முடியாமலேயே இருக்கிறதே என்ன காரணம்? எந்த ஆண்டு துவக்கப்பட்டது? இவ்வளவு காலதாமதமாவதற்கு என்ன காரணம்? அதிகாரிகள் பொறுப்பா? அல்லது கட்டிய ஒப்பந்தக்காரர்கள் பொறுப்பா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ஆயிரக்கணக்கான கட்டிடங்களும் தாமதப்படுகின்றன. ஏதோ ஒன்றிரண்டு அப்படி தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், 1978-லிருந்து இன்றைக்கு 1983 வரையிலும் வருவாய் ஆய்வாளர்களுக்கு 958 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இது போன்று ஒரு சில இடங்களில் தாமதமாகியிருக்கிறது என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். 1979 ஆம் வருஷம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. முதலில் திரு. சின்னசாமி என்பவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. 60 சதவீதம் கட்டி விட்டு, முடிக்காமல் விட்டு விட்டுப் போய்விட்டார். பிறகு திரு. பாலசுப்பிரமணியம் என்பவரிடம் கொடுக்கப்பட்டது. அவரும் பாதி கட்டிவிட்டுப் போய்விட்டார். அதற்குப் பிறகு இறுதியாக வேறொரு ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்து அது கட்டி முடிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கான கோரிக்கை

141—(வினா எண். 20863)* : திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிளகாய், மல்லி, புளி, வெல்லம், வெல்ல சர்க்கரை, மஞ்சள், பூண்டு ஆகிய பொருட்களை உணவுப் பொருளாகக் கருதி விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனக் கேட்டு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

1984 பிப்ரவரி 23]

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்த முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ) மற்றும் (இ) ஆம். மிளகாய், மல்லி, புளி, வெல்லம், சர்க்கரை, மஞ்சள், பூண்டு ஆகியவற்றிற்கு வரி விலக்குக் கோரி வியாபாரி களிடமிருந்து பலமுறை மனுக்கள் வரப்பெற்றன. அவைகளை யெல்லாம் அரசு நன்றாக ஆராய்ந்து பார்த்து வரி விலக்குக் கொடுப்பதற்கு இயலாது என்ற பதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, இன்றையதினம் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியா விலேயே சிறு குடும்பங்கள் அல்லது நடுத்தர குடும்பங்கள் மிக அதிகமான விலைவாசி உயர்வினாலே, கஷ்டப்படுவதை மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். அந்த வகையில் இது வியாபாரிகள் கேட்டது என்று கருதிவிடாமல், நீங்கள் வரியைக் குறைப்பீர்களானால் இந்தப் பொருள்கள் விலை குறையும், நம்முடைய பொதுமக்கள் மிகவும் நன்மை அடை வார்கள். அதைக் கருதி, அரசாங்கத்தின் வருவாய் கொஞ்சம் குறைந்தாலும் பரவாயில்லை என்று, எண்ணற்ற பொதுமக்களின் நலன் கருதி அதை மறுபரிசிலனை செய்து இந்த வரியைக் குறைப்பதற்கு அல்லது எடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நோய்க்கு மூல காரணத்தை நாம் கண்டு பிடிக்காமல் நோய்க்கு மேலே புனுகு பூசிக் கொண்டிருக்கிற மாதிரி எனக்குத் தெரிகிறது. நோய்க்குக் காரணத்தைப் பார்க் கிறபோது, செய்தித் தாள்களில் பார்த்திருப்பீர்கள். பல்லா யிரக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்கள் கணக்கிலே வராத கறுப்புப் பணம் — நாட்டிலே உலவுவதுதான். அதுதான் நோய்க்கு மூல காரணம். இப்படிப்பட்ட சிறு பொருள்களின் மேல் வரி போடுவதால் அல்ல— பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் இன்றைக்குக் கறுப்புப் பணமாக நாட்டிலே உலவுவது தான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமாகும்.

(முற்பகல் 9-40)

திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல காரணம் எப்படி இருந்தாலும் ஒரு வியாதி, விபத்து என்றால் முதல் உதவி என்று உண்டு. நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் டாக்டராக இருந்து நோய்க்கு மூல காரணமான கறுப்பு பணத்தை ஒழிக்கிற அதிகாரம் அவருக்கு இல்லை என்பதை அறிவேன். ஆகவே வியாதியை ஒழிக்கிற அதிகாரம் அவரிடத்திலே இல்லையென்றாலும் முதல் உதவி செய்கிற அதிகாரம் அவருக்கு இருக்கிறது என்று

கருதுகிறேன். ஆகவே பொதுமக்களுடைய நலன் கருதி அரசாங்கத்திற்கு சிறிதுவருவாய் குறைந்தாலும் பரவாயில்லை என்கிற அளவில் இந்த வரியை ரத்து செய்வதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலுதவி செய்கிற முறையிலே தான் இப்படிப்பட்ட பொருள்களுக்கு அதிகமான வரியைப் போடாமல் குறைத்துப் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மிளகாய், மல்லி, புளி, வெல்லம், வெல்ல சர்க்கரை, மஞ்சள், பூண்டு ஆகியவைகள் எல்லாம் ஏழை, நடுத்தர மக்கள் அதிகமாக பயன்படுத்துகிற பொருள்கள். இந்தப் பொருள்களின் மீது வரியை ரத்து செய்வதாலே அரசாங்கத்திற்கு எவ்வளவு வரி இழப்பு என்று அமைச்சர் அவர்கள் கணக்கு பார்த்திருக்கிறார்களா? மதுக்கடைகளை திறந்திருப்பதால் அரசிற்கு பல கோடி வரி கிடைக்கிறது. அதேபோல் லாட்டரிக்கு வரி போட்டிருக்கிறோம். ஆகவே பெரும்பாலும் ஏழை மக்கள், நடுத்தர மக்கள் பயன்படுத்துகிற காய்கறிகளோடு சம்பந்தப்பட்ட அழுகுகிற பொருள்களாக இவை இருப்பதால் அரசு மனிதாபமான நோக்கத்தோடு இந்தப் பொருள்களின் மீதான வரியை ரத்து செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இவைகள் எல்லாம் அழுகும் பொருள்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசாங்கத்திற்கு சுமாராக 5 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் மதுக்கடைகள், லாட்டரி டிக்கட் என்றெல்லாம் சொன்னார்கள். நான் முன்பே சொன்னேன். லாட்டரி டிக்கட்டிற்கு வரி போட்டோம், அதற்கு உயர்நீதி மன்றத்தில் தடை கேட்டு இருக்கிறார்கள். மது வகைகளை தொடர்ந்து இந்த அரசு வைத்துக் கொண்டிருக்காது. படிப்படியாக குறைக்கும். மது விலக்கில் இந்த அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நானும் சொல்லி இருக்கிறேன். ஆகவே அதில் வருகிற வரி என்பது டெம்ப்பரரி தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது விலைவாசி உயர்விற்கு கறுப்புப் பணம் காரணம் என்று சொன்னார்கள்.

1984 பிப்ரவரி 23]

இந்த கறுப்புப் பணத்தை ஒழிப்பது என்பது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய விவகாரம். ஆகவே அதை ஒழிக்க மத்திய அரசிற்கு தமிழக அரசு ஆலோசனை செய்து உள்ளதா? குறிப்பாக 100 ரூபாய் நோட்டை செல்லாது என்று அறிவிக்க மத்திய அரசிற்கு ஆலோசனை சொல்லப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

தொடர்ந்து நெல்பயிர் செய்வதால் வயல்களில் ஏற்படும் துத்த நாகப் பற்றாக்குறை.

142—(*வினா எண். 19308)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடர்ந்து ஒரே இடத்தில் நெல் பயிர் செய்வதால் துத்தநாகப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அக்குறையைப் போக்க விவசாயப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து செயல்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நமது மாநிலத்தின் பல பகுதிகளில் செய்த ஆராய்ச்சியின் மூலம் துத்த நாகப் பற்றாக்குறை நெல் வயல்களில் வெகுவாக இருப்பதை கண்டறிந்துள்ளது. இப்பற்றாக்குறை வராமல் தடுக்க, நெல் நடவு செய்யுமுன்பாக ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ அல்லது எக்டேர் ஒன்றுக்கு 25 கிலோ துத்தநாக சல்பேட் இட வேண்டும்.

உற்பத்தியை அதிகரிக்க கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய ரக கரும்பு.

143— (*வினா எண். 19458)—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்தில் கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு புதிய ரக கரும்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அந்த ரக கரும்பு பயிரிட எந்தெந்த மாவட்டங்களுக்கு ஏற்றது?

(இ) ஒரு ஏக்கருக்கு மகசூல் எவ்வளவு வருகிறது?